மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024ம் ஆண்டு மார்ச் திங்கள் 26ம் நாள் செவ்வாய்க்கிழமை

இ.மஎண்.06/2024
உள்
அசல் வழக்கு எண்.76/2022
--------

ஆர்.சரவணக்குமார் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. வி.ராமமூர்த்தி
2. ஆர்.சௌந்தரராஜ்
3. ஆர்.ராஜலெட்சுமி
4. ஆர்.பார்த்திபன்
5. எஸ்.பன்னீர்செல்வம்
6. பி.எல்.டிரான்ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட்
   அதன் நிர்வாக இயக்குநர்
   பி.லோகநாதன்
7. சார்பதிவாளர், சாத்தூர்
8. மாவட்ட ஆட்சியர்
   விருதுநகர் மாவட்டம் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
9. மாவட்ட பதிவாளர்
   விருதுநகர் ... 9ம் உத்தேச எதிர்மனுதாரர்/9ம் உத்தேச பிரதிவாதி

இந்த மனு 04.01.2024ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 15.03.2024ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.D.பாஸ்கரன் அவர்கள் ஆஜராகியும், 7, 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.மணிவண்ணன் அவர்கள் ஆஜராகி எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், 5ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.மாரிக்குமார் அவர்கள் ஆஜராகி எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், 6ம்

எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ராஜேஸ் அவர்கள் ஆஜராகி எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10 (2)ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், தாவா அசல் வழக்கில் 9ம் உத்தேச எதிர்மனுதாரர்/உத்தேச பிரதிவாதியாக விருதுநகர் மாவட்ட பதிவாளர் அவர்களை வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 20.12.2023ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர்/ வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்</u>:-

தாவா வழக்கானது தற்போது மனுதாரர் தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது.இந்நிலையில் தாவா வழக்கில் 7வது பிரதிவாதியாக சாத்தூர் சார்பதிவாளர் அவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார். தற்போது சார்பதிவாளர் தரப்பினராக உள்ள எந்தவொரு வழக்கிலும், மாவட்ட பதிவாளரை தரப்பினராக சேர்க்க வேண்டுமென்பதால் தாவா வழக்கை வனைந்த விதத்தில் எவ்வித குறைபாடும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக மாவட்ட ஆட்சியரை தாவா வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) <u>7ம் எதிர்மனுதாரர்/7ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 8ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம்:-</u>

மனுவில் வியக்தமாய் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர ஏனைய சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனுதாரர் தபசில் சொத்தில் தனக்குரிய 1/4 பங்கினை கட்டுப்படுத்தாது மற்றும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளார். அம்மனுவை தாக்கல் செய்யும் போதே

மாவட்ட பதிவாளரை சேர்த்து தாக்கல் செய்யாமல் காலம் கடத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், மேற்படி மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

<u>7) தீர்வு</u>:–

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கம் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் தாவா அசல் வழக்கில் 9ம் உத்தேச எதிர்மனுதாரர்/உத்தேச பிரதிவாதியாக விருதுநகர் மாவட்ட பதிவாளர் அவர்களை வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 20.12.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மனுதாரரால் மனுவில் சொல்லியுள்ள விபரங்களையும், எதிர்மனுதாரர்கள் எதிருரையில் சொல்லியுள்ள விபரங்களையும் மனுதாரர் இந்த வழக்கில் அவசிய தரப்பினரா? இல்லையா? என்பதையும் வழக்கு விசாரணையின்போது மட்டுமே தீர்மானிக்க முடியும். சார்பதிவாளர் தரப்பினராக உள்ள வழக்கில் மாவட்ட பதிவாளரை தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில்

எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, தாவா அசல் வழக்கில் 9ம் உத்தேச எதிர்மனுதாரர்/உத்தேச பிரதிவாதியாக விருதுநகர் மாவட்ட பதிவாளர் அவர்களை வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 20.12.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு மார்ச் திங்கள் 26ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்/ வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.06/2024
உள்
அ.வ.எண்.76/2022
**<u>உத்தரவு</u>**
நாள்– 26.03.2024